பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

02 09 2025 TUESDAY 7.15 AM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மகளிருக்கு அதிகாரம் அளிக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சியுடன் சுற்றுச் சூழல் பாதுகாப்பை சமநிலைப்படுத்தும் வகையில், மத்திய அரசு கொள்கைகளை வகுத்து செயல்பட்டு வருவதாக சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

4. நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் 11 புள்ளி எட்டு எட்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. சூடானில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

மகளிருக்கு அதிகாரம் அளிக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பீகார் மாநில மகளிர் வாழ்வாதார கூட்டுறவு கடன் சங்கத்தை காணொலி மூலம் இன்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, மகளிருக்கு அதிகாரமளித்தல் முக்கியமானது என்று தெரிவித்தார்.

மகளிரின் வாழ்க்கையை எளிதாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள், மகளிரின் பெயரில் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்ய சிறப்புக் கவனம் செலுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

குழாய் மூலம் குடிநீர், கழிப்பறைகள் கட்டுதல். இலவச சமையல் எரிவாயு இணைப்பு, லட்சாதிபதி சகோதரிகள் போன்ற திட்டங்களால் மகளிரின் வாழ்க்கைத்தரம் பெரிதும் உயர்ந்துள்ளது என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு புதுதில்லியில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், வர்த்தக ஒப்பந்தத்தின் போது, தேசத்தின் நலன்களை பாதுகாக்க முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று கூறினார்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்ட, இந்தியா உறுதியுடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டுக்குப் பிறகு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் 5 மடங்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

2030ஆம் ஆண்டுக்குள் இத்துறையில் 500 ஜிகாவாட் மின்உற்பத்தி எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவுடனான நல்லுறவு மேலும் வலுவடைந்து வருவதாக திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>><<<<<

வளர்ச்சியுடன் சுற்றுச் சூழல் பாதுகாப்பை சமநிலைப்படுத்தும் வகையில், மத்திய அரசு கொள்கைகளை வகுத்து செயல்பட்டு வருவதாக சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பான உச்சிமாநாட்டில் பேசிய அவர், சுற்றுச் சூழல் தணிக்கை விதிகள் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கை, முறையான கட்டமைப்பை உருவாக்கும் என்று கூறினார்.

வனப் பாதுகாப்பு சட்டத்தில், மத்திய அரசு திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டிவரும் அதேநேரத்தில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள வலுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச் சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை இயக்கம். அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கம் போன்றவையும், சுழற்சி பொருளாதார நடைமுறைகளும் நாட்டின் சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் என்று திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

பருத்தி விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஜவுளி அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய பருத்திக் கழகம் வடிவமைத்துள்ள *Kapas Kissan* என்ற செயலியின் சேவையை புதுதில்லியில் இன்று அவர் தொடங்கி வைத்தார்.

இந்த செயலியின் மூலம், குறைந்தபட்ச ஆதரவு விலையின் கீழ், விவசாயிகளிடமிருந்து பருத்தி கொள்முதல் எளிதில் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள பருத்தி விவசாயிகள் இதனை பயன்படுத்தும் வகையில், பல்வேறு மாநில மொழிகளிலும் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு. கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜவுளித்துறை பிரதிநிதிகளுடன் சென்னையில் இன்று நடைபெற்ற கூட்டத்தில், மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பங்கேற்று, பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அமெரிக்காவின் வரி விதிப்பு நடவடிக்கைகளால், இத்துறையில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அதற்கான தீர்வுகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதேபோல், தோல் ஏற்றுமதி கூட்டமைப்பு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திலும் திருமதி. நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டு, அந்த தொழில்துறை சார்ந்த பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

இக்கூட்டங்களில், பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், கட்சியின் தேசிய மகளிரணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

இஸ்ரோவின் செமிகண்டக்டர் ஆய்வகத்தால் உருவாக்கப்பட்ட, *Vikram 3201* என்ற சிப், பிரதமர் திரு. நரேந்திர மோடியிடம் வழங்கப்பட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த சிப், புதுதில்லியில் இன்று நடைபெற்ற *SEMICON* இந்தியா மாநாட்டின்போது பிரதமரிடம் வழங்கப்பட்டதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு தலைமையின் கீழ், இந்தியா நவீன தொழில்நுட்பத்தில் விரைவான முன்னேற்றத்தை அடைந்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

செமிகண்டக்டர் இயக்கத்தின் மூலம், இத்துறையில் உலகளாவிய மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் 11 புள்ளி எட்டு எட்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் நிலக்கரி உற்பத்தி 14 புள்ளி நான்கு மூன்று மில்லியன் டன்னாக இருந்தது என்று நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாகவும், வெளிப்படையான நடைமுறைகளாலும் உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் எரிசக்தி தேவைகளுக்கு ஏற்ப, நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

சூடானில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் மேற்கு *Darfur* பகுதி மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பகுதி சூடான் கிளர்ச்சிப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், சேத விபரங்கள் இதுவரை முழுமையாக மதிப்பிடப்படவில்லை.

மீட்புப் பணிகளுக்கு ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் உதவ வேண்டும் என்று சூடான் கிளர்ச்சிப் படை கோரிக்கை விடுத்துள்ளது.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானின் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 124-ஆக அதிகரித்துள்ளது.

3 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்து, மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*Kunar* மாகாணத்தில் எட்டாயிரம் வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

>>>>><<<<<

இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில், இந்தியா முதலிடத்தில் உள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் இலங்கைக்கு ஒரு லட்சத்து 98 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாகவும், இதில் 46 ஆயிரம் பேர் இந்தியர்கள் என்றும் அந்நாட்டு சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பஞ்சாபில் சில இடங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, உத்ராகண்ட் மற்றும் ஜம்மு கஷ்மீரின் சில இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

ஒடிசா, சத்திஷ்கட் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட சில இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி டாக்டர் *Jenamani* எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்நிலையில், தில்லியில் பெய்து வரும் கனமழை காரணமாக, யமுனை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், அந்த ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலத்தில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனமழையால், ஜம்மு – ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து தடைபட்டது.

ஹிமாச்சலப் பிரதேசத்தில் பெய்து வரும் கனமழையால் ஆறு தேசிய நெடுஞ்சாலைகளில் நிலச்சரிவு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் பழுதடைந்துள்ளதால். பல்வேறு இடங்களில் மின்விநியோகமும் தடைபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பஞ்சாப் மாநிலத்தில் *Ghaggar, Markanda, Tangri* ஆகிய நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், பாட்டியாலா, ஜலந்தர் உள்ளிட்ட மாவட்ங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்ரிஸ்டர், *Hosiarpur, Ferozepur, Gurdaspur* ஆகிய பகுதிகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு ராணுவம், விமானப்படை மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>><<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Ginpaul Sonna* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*Baoji*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 21-12 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் *Yuehang Wang*-ஐ வென்றார்.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் தில்லி அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

விசாகபட்டிணத்தில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

*இரவு 9 மணிக்கு தொடங்கும் மற்றொரு ஆட்டத்தில் ஜெய்ப்பூர் – பாட்னாவை எதிர்கொள்கிறது.*

**>>>>><<<<<<**